**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 63** **நாள்: 09.05.2018**

# சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரி புனரமைப்பு திட்டப் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்.

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரி புனரமைப்பு திட்டப் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (09.05.2018) துவக்கி வைத்தார்.

ஒரு மாநகரத்தின் நிலையான சமூக பொருளாதார வளர்ச்சியில் நகரத்தில் உள்ள ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் முக்கியமானவைகளாகும். மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் விதி 110ன்கீழ் மாநகரத்தின் நிலத்தடி நீர்மட்டத்தினை பல்வேறு வகைகளில் அதிகரிக்கவும், தமிழகத்தில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் மற்றும் கோவில் குளங்களை புனரமைக்கவும், நீடித்த நீர் பாதுகாப்பு திட்டம் 2015ஐ அறிவித்தார்கள். அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு அரசு அலுவலக வளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், பூங்காக்களில் மழைநீரை சேகரித்து, அதை அந்த பூங்காக்களிலேயே பயன்படுத்துதல் மற்றும் கோவில் குளங்களை புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், 206 குளம் மற்றும் ஏரிகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 32 குளங்கள் மற்றும் ஏரிகள், சென்னை சீர்மிகு நகரம் நிதியிலிருந்து ரூ.5.85 கோடியில் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்று, வில்லிவாக்கம் – சிட்கோ நகர் பகுதியில் உள்ள வில்லிவாக்கம் குளம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், ரூ.16 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட உள்ளது.

வில்லிவாக்கத்தில் சிட்கோ நகர் பகுதியில் உள்ள வில்லிவாக்கம் ஏரி ஒரு பெரிய நீர்நிலையாகும். ஆனால், தற்போது அது பயன்படாத நிலையில் உள்ளது. இந்தக் ஏரியினை முறையாக புனரமைத்தால், இது வில்லிவாக்கம் பகுதியில் ஒரு பிரதான நீர் நிலையாக இருக்கும். மேலும் இதன் மூலம் வில்லிவாக்கம் பகுதியின் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்கலாம்.

இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின்

உத்தரவின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற நிதி சேவை நிறுவனம் லிமிட்டெட் (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited) மூலம் கலந்தறிதற்குரியவர்கள் (Consultant) நியமனம் செய்து விரிவாக ஆய்வுகளை மேற்கொண்டு தங்களின் ஆய்வினை முடித்து விரிவான திட்ட அறிக்கையினை அளித்துள்ளனர்.

இந்த வில்லிவாக்கம் ஏரி 39.00 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இது சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்திற்கு சொந்தமானதாகும். இப்பகுதி அதிகமாக தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியாக உள்ளது. இதற்கு அருகில் வில்லிவாக்கம் புறநகர் ரயில் நிலையம் உள்ளது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தினால் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள 24.64 ஏக்கர் நிலமும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள 2.86 ஏக்கர் நிலமும் சேர்த்து மொத்தம் 27.50 ஏக்கர் நிலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தரப்பட்டுள்ளது. 11.50 ஏக்கர் நிலத்தினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் நீரேற்று நிலையத்திற்காகவும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யவும் அவர்கள் வைத்துக்கொண்டுள்ளனர். புனரமைப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு 24.64 ஏக்கர் நிலப்பரப்பில் 10.69 ஏக்கர் பரப்பில் நீர் நிரம்பியுள்ளது. மீதமுள்ள பரப்பில் கட்டுமான கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. ஏரியில் தண்ணீர் சராசரியாக 1 மீட்டர் ஆழத்திற்கு மட்டுமே தற்போது உள்ளது.

ஏரியினை தூர்வாருதல், ஏரியின் கொள்ளளவினை 20,000 கனமீட்டரிலிருந்து 70,000 கனமீட்டராக அதிகரித்தல், ஏரிக்கு கரைகள் அமைத்தல் மற்றும் டி.வி.எஸ். கால்வாயை ஒட்டி ஒரு சாலை அமைத்தல் ஆகிய முக்கியமான சுற்றுச்சூழல் மீட்பு பணிகள் அமைத்தல். குழந்தைகள் பூங்கா, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி மையம், நடைபயிற்சி பாதை, ஆவின் விற்பனை நிலையம், நுழைவாயில், பல்நோக்கு தாழ்வாரம், வாகன நிறுத்துமிடங்கள், விளையாடும் இடங்கள், வெளியில் இருப்பதையும் காணும் வகையிலான வேலி மற்றும் திறந்தவெளி திரையரங்குகள் ஆகியவைகளை அமைத்தல்.

மாசுபடாமல் இருக்க எளிதான வழிவகைகள் (bio filters, floating wetland system and on line sensors for water quality monitoring) ஏற்படுத்துதல். இருக்கைகள் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்துதல், மின் கழிப்பறை வசதிகள் அமைத்தல், எல்.ஈ.டி. விளக்குகள் பொருத்துதல் மற்றும் குப்பைத் தொட்டிகள் வைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல்.

ஏரியின் கரையினை பாதுகாக்க நவீன முறைகளை பின்பற்றுதல் (Stone rip-rap and filter fabric layer) போன்ற சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. வில்லிவாக்கம் ஏரியை நீரை சேகரிக்கவும் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும் பயன்படுத்தலாம்.

மழைக்காலத்தில் ஏரிக்கு நீர் உள்வரும் பாதைகளின் மூலம் மழைநீர் குளத்திற்குள் வரும். ஏரி நிரம்பினால், உபரிநீர் வெள்ளத்தடுப்பு அமைப்புகளின் மூலம் ஏரிக்கு டி.வி.எஸ். கால்வாய்க்கு செல்லும்.

இந்தத் திட்டத்தினால் ஏற்படும் முக்கியமான பயன்கள் கீழ்வருமாறு:–

1. ஏரி தூர்வாரப்பட்டு 3.00 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை ஆழப்படுத்தப்படுவதால் ஏரியின் கொள்ளளவு அதிகமாகிறது.

2. ஏரிக்கு அருகாமையில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் மற்றும் வெள்ளம் ஏற்படுவது தடுக்கப்படும்.

3. ஏரியை சுற்றியுள்ள காலி நிலப்பரப்பில் பொழுதுப்போக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் அதிக எண்ணிக்கையில் பார்வையாளர்கள் கவரப்பட்டு, அவர்கள் தங்களின் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பார்கள்.

4. கழிவுநீர் ஏரிக்குள் வருவது தடுக்கப்பட்டு ஏரி மாசு அடையாமல் தடுக்கப்படும்.

இதன் மூலம் வில்லிவாக்கம், கொரட்டூர், அண்ணாநகர், அம்பத்தூர் பகுதிகளை சார்ந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ள பொழுதுப்போக்கு சுற்றுலா இடமாக இது விளங்கும்.

மேலும், ரூ.5.95 கோடி மதிப்பீட்டில், 6 குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணி, பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட உள்ளது. தொடர்ந்து, 2 குளங்களுக்கு ரூ.20.29 கோடி மதிப்பீட்டில், சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனத்தால் (CRRT) விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் துவங்கப்பட உள்ளது. கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியில், இவ்விடங்களில் வரும் 38 குளம் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு ரூ.40.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள, விரிவான திட்ட அறிக்கை கலந்தாலோசகரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

24 குளங்கள் மற்றும் ஏரிகளில் புனரமைப்பு பணி மேற்கொள்ள TNUIFSL நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மீதமுள்ள 104 குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு தற்போது TNUIFSL நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னையில், உள்ள 104 ஏரிகள் மற்றும் குளங்களை புனரமைக்க, சமூக அக்கறையுடன் உள்ள வணிக பொது நிறுவனங்கள் (Corporate Companies) மற்றும் தொண்டு நிறுவனங்கள் வரவேற்கப்படுகின்றனர். இதற்கான சிறப்பு கூட்டத்தை, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில், நாளை (10.5.2018) பெருநகர சென்னை

மாநகராட்சியின் ரிப்பன் மாளிகையில் நடத்த, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்கள், முன்னாள் அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்கள், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**